பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 04 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அஇஅதிமுக – பிஜேபி இடையேயான கூட்டணி வளர்ச்சிக்கானது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

2. தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றிக்கு மக்கள் பங்களிப்பே காரணம் என்று மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

3. செமி கண்டெக்டர் துறையில் இந்தியா தொடர் வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

5. இலங்கையில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் --*

**<<<<<>>>>>>**

அஇஅதிமுக – பிஜேபி இடையேயான கூட்டணி வளர்ச்சிக்கானது என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அஇஅதிமுக இணைந்ததன்மூலம் தேசிய ஜனநாயக கூட்டணி மேலும் வலுப்பெற்றுள்ளதாக கூறினார்.

திமுக அரசின் ஊழல் முறைகேட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், தமிழகத்தின் வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் இந்த கூட்டணி பாடுபடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, பிஜேபி – அஇஅதிமுக கூட்டணி எந்த கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்பது குறித்து அதில் இடம்பெற்றுள்ள தலைவர்கள் விளக்கவில்லை என்று திமுக தலைவருமு, முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூட்டணி தொடர்பான அறிவிப்பின்போது, இதுபற்றி விளக்காமல், திமுக அரசையும், தம்மையும் விமர்சித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிஜேபி – அஇஅதிமுக கூட்டணி, திமுக-வுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அஇஅதிமுக செய்தித்தொடர்பாளர் திரு கோவை சத்யன் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், இதன் காரணமாகத்தான், இக்கூட்டணியை குறைகூறி திமுக தவறான தகவல்களை தெரிவித்து வருவதாக கூறினார்.

<<<<<>>>>>

இந்திய படைப்பாற்றல் தொழில்நுட்பத்திற்கான மையம், ஐஐடி போன்ற உலகத்தரம் வாய்ந்த நிறுவனமாக செயல்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மையத்தை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் தமது முன்னிலையில் கையெழுத்தானதாக கூறினார்.

மத்திய அரசும், மகாராஷ்ட்ரா அரசும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறையில் உலத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனமாக இது அமையும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சியில் வெளிநாடுவாழ் இந்தியர்களும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக ஆஸ்திரியா சென்றுள்ள அவர், **Vienna**-வில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றினார்.

ஆஸ்திரியா உடனான வர்த்தக உறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

**<<<<<>>>>>>**

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், ஒடிஷாவில் மட்டும் ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

கட்டாக்கில் இந்த திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த திட்டத்தின்மூலம், ஒடிஷாவில் உள்ள மூன்று கோடியே 52 லட்சம் பேர் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார்.

இம்மாநிலத்தில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

**<<<<<>>>>>>**

தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றிக்கு மக்கள் பங்களிப்பே காரணம் என்று மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் மகாராஜ் கஞ்சில் அரசு மகளிர் கல்லூரிகளில் கழிவறை மற்றும் குடிநீர் வசதித் திட்டங்களை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு அனைவரும் பங்களிக்க வேண்டும் என்றும் திரு பங்கஜ் சௌத்ரி கேட்டுக்கொண்டார்.

**<<<<<>>>>>>**

நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் மூன்று நாள் அயோத்தியா திருவிழாவை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இதுபோன்ற திருவிழாக்கள் கலாச்சாரத்தை பாதுகாக்க உதவிடும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

செமி கண்டெக்டர் துறையில் இந்தியா தொடர் வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்கான இயக்கத்தின்மூலம், 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த துறை ஆண்டுதோறும் 21 சதவீத வளர்ச்சியை கண்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, போர்ச்சுக்கல் மற்றும் ஸ்லோவேக்கியாவில் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று புதுதில்லி திரும்பினார்.

இந்த பயணத்தின்போது, அவ்விரு நாடுகளின் தலைவர்களுடன் குடியரசுத் தலைவர் ஆக்கப்பூர்வமான பேச்சுக்களை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

ஹனுமன் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் தலைவர்கள் பலர் வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

**Kishtwar** மாவட்டத்துக்கு உட்பட்ட **Chhatroo** வனப்பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பாதுகாப்புப்படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நேரிட்டது.

இதில் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அப்பகுதிக்கு கூடுதல் பாதுகாப்புப்படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

**<<<<<>>>>>>**

சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைளில் மூன்று நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பீஜாப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது நேரிட்ட துப்பாக்கிச்சண்டையில் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

**<<<<<>>>>>>**

மணிப்பூரில் ஆறு தீவிரவாதிகளை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இம்பால் கிழக்கு, **Bishnupur** உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் காவல்துறையினர் இவர்களை கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>>**

மகாராஷ்ட்ராவில் தொழிற்சாலை ஒன்றில் நேரிட்ட தீ விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

**Umrer** –ல் உள்ள இந்த தொழிற்சாலையில், நள்ளிரவு தீ விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறையினர் கூறினர்.

**<<<<<>>>>>**

தில்லியில் உள்ள மழைநீர் வடிகால்கள் அனைத்தும் பருவமழை தொடங்குவதற்குமுன் தூர்வாரப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு **Parvesh Varma** கூறியுள்ளார்.

இன்று தில்லியில் இப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் இப்பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இப்பணிகள் அனைத்தும் ஒருமாத காலத்திற்குள் முடிவடையும் என்று அதிகாரிகள் உறுதியளித்துள்ளதாகவும் திரு **Parvesh Varma** கூறினார்.

**<<<<<>>>>>**

மேற்கு வங்கத்தில் வக்ஃப் சட்டத்திருத்தத்திற்கு எதிராக நடைபெற்றுவரும், ஆர்ப்பாட்டங்கள் காரணமாக பல்வேறு பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நிலைமையை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக எல்லை பாதுகாப்புப்படையினர் பாதுகாப்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, திரிணமுல் காங்கிரஸ் அரசு தங்களது தோல்விகளை மறைப்பதற்காக மக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கில், போராட்டங்கள் என்ற பெயரில் சட்டம் - ஒழுங்கை பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு **Suvendu Adhikari** குற்றம் சாட்டியுள்ளார்.

**<<<<<>>>>>**

தெலங்கானாவில் பத்ம விருது பெற்ற சுற்றுச்சூழல் ஆர்வலர் ராமையா காலமானார்.

அவரது மறைவுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி, மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி மற்றும் தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மரம் நடுவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதில், அவர் ஆற்றிய பணிக்காக தெலங்கானா அரசின் ஆறாம்வகுப்பு பாடத்திட்டத்தில் இவரது வாழ்க்கை வரலாறு குறித்த பாடம் அண்மையில் சேர்க்கப்பட்டது.

**<<<<<>>>>>>**

கேரளாவில் 700 கிலோ போதைப்பொருளை அம்மாநில காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

கொல்லம் மாவட்டத்துக்கு உட்பட்ட **Kadakkal** பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடியில் இந்த போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

**<<<<<>>>>>>**

சர்வதேச இளையோர் திருவிழா சிக்கிமில் இன்று தொடங்கியது.

அம்மாநில முதலமைச்சர் திரு பிரேம்சிங் தமாங் இதனை தொடங்கிவைத்தார்.

மாநில அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கையில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

----------

உலக கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Dhiraj Bommadevara** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், பிரான்சின் **Thomas Chirault** –ஐ வென்றார்.

------------

புனேயில் நடைபெற்று வரும் **Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் சீன தைபே-ஐ வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் **Vaidehi Chaudhary -**யும், **Shrivalli Bhamidipaty** –யும் வெற்றிபெற்றனர்.

இதுவரை நடைபெற்ற நான்கு போட்டிகளில் இந்தியா மூன்றில் வெற்றிபெற்றுள்ளது.

-----------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் லக்னோ – குஜராத் அணியையும், ஹைதராபாத் - பஞ்சாப் அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<<>>>>>>**